IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.253/2016
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 11.45 AM.

வா.சா.1 சாட்சி சேது த.பெ.வீரணன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.02.2026 in accordance with the provisions of Act XX141.**

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் நிலையூரில் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் சர்வே எண் 29/2 என்றால் சரிதான். சர்வே எண். 29/2 என்பது தற்போது நத்தம் புல எண். 376 என்று மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். நத்தம் புல எண் பல பிரிவுகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு ஒதுக்கப்பட்ட பட்டா எண். 979 என்றால் மாறியிருக்கலாம். அதன் புல எண் 376/8 என்றால் சரிதான்.

2. சர்வே எண். 376/9 என்பது எனது தம்பி மனைவி இந்திரா என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 376/10 என்பது எனது மருமகள் பொன்மகள் என்பவரின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 376/11 என்பது எனது தங்கை மகள் சரண்யா என்பவரின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 376/12 என்பது எனது மகன் அருண்குமார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 376/8 ன் வடக்கே 4ம் பிரதிவாதி

வாசுமதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 377/8, 9, 10 கட்டுப்பட்ட இடத்திற்கு வடக்கே 19.6 மீ அளவுள்ள கிழமேல் நடைபாதை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிழமேல் நடைபாதை உள்ளதை மறுத்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிழமேல் பொது நடைபாதைக்கு வடக்கே 3ம் பிரதிவாதி மகேஸ்வரி வீடு உள்ளது என்றால் சரியல்ல.

3. வாசுமதி, மகேஸ்வரி என்பவர்கள் 19.6 மீ கிழமேல் அகலம் அளவுள்ள பொது நடைபாதை வழியாக கிழக்கே செல்லும் சம்பகுளம் ரோட்டினை அடைந்து பயன்படுத்தி வருகின்றனர் என்றால் பாதையே இல்லை. 3, 4 பிரதிவாதிகள் பொது நடைபாதையை பயன்படுத்துவதில் எனக்கு ஆட்சேபணை இருந்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழமேல் பொது நடைபாதையை பற்றி எங்களுக்குகிடையே உள்ள பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

4. எனக்கு பட்டாவில் வழங்கப்பட்ட இடத்தைவிட கூடுதலாக உள்ள இடத்தை பொறுத்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பொது நடைபாதை என்பதால் மேற்படி வழக்கு சொத்தை பயன்படுத்தி வரும் அனைவரையும் தரப்பினராக சேர்க்கவேண்டியது சட்டப்படியானது என்றும் அவ்வாறு சேர்க்காததால் அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய

எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் நீதிமன்றம் உத்தரவிட்டால் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனது வழக்கு பரிகாரத்திற்கு தேவையான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்பதால் எனது பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ. 7 ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் முதலில் தாக்கல் செய்த போது குறியீடு செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை மறைத்து வா.சா.ஆ7 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ. 7 ல் என்னுடைய கையெழுத்தும், கருப்பாயியம்மாள் கையெழுத்தும் முழுமை பெறாமல் உள்ளது என்றால் நடுப்பக்கத்தில் கருப்பாயியம்மாள் கையெழுத்து செய்யாமல் விடுபட்டது என்பது எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 12. 45 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.02 15:20:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.